பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

13 05 2025 **TUESDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பாகிஸ்தானின் எந்தவொரு இடத்திலும் தீவிரவாதிகள் அமைதியாக தங்கியிருக்க முடியாது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி உறுதிபட கூறியுள்ளார்.
- பாதுகாப்பு துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீடு ஆண்டுதோறும் அதிகரிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒன்பது பேருக்கும் கோவை மகளிர் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.
- தெற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப்போட்டியின் மகளிர் பேட்மிண்டன் பிரிவில் தமிழகத்தின் ஆதிரா ராஜ்குமார் வெண்கலப்பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<<>>>>>

பாகிஸ்தானின் எந்தவொரு இடத்திலும் தீவிரவாதிகள் அமைதியாக தங்கியிருக்க முடியாது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி உறுதிபட கூறியுள்ளார்.

பஞ்சாப் மாநிலம் ஆதம்பூர் விமானப்படை மையத்தில் ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையில் சிறப்பாக பணியாற்றிய விமானப்படை வீரர்களை பாராட்டி பேசிய பிரதமர், தீவிரவாதிகள் தங்கியுள்ள இடங்களை முற்றிலுமாக அழிக்கும் திறனை இந்தியா பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

தீவிரவாதிகள் பதுங்கியுள்ள இடங்களை துல்லியமாக தாக்கும் திறனை இந்தியா பெற்றுள்ளது என்று அவர் கூறினார்.

இந்த நடவடிக்கையின்போது தீவிரவாதிகளின் முகாம்கள் மட்டுமின்றி, அவர்களின் பயங்கரவாத தாக்குதல் திட்டங்களையும், அராஜகத்தையும் ஒழித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த சீரிய பணியை வீர தீரத்துடனும், மன வலிமையுடனும், தொழில் திறனுடனும் சிறப்பாக முடித்து நாட்டை பாதுகாத்த முப்படையினருக்கும் தமது நன்றியை தெரிவிப்பதாக பிரதமர் கூறினார்.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் அந்நாட்டு ராணுவத்தை சார்ந்திருந்த போதிலும், அவர்களை ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்திய வீரர்கள் முறியடித்ததாக தெரிவித்தார்.

நமது ராணுவத்தின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத பாகிஸ்தான்ராணுவமும், தீவிரவாதிகளும் நாட்டின் அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதாகவும், இதனை சகித்துக்கொள்ள முடியாது என்றும் பிரதமர் கூறினார.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது 20 நிமிடங்களில் தீவிரவாதிகள் தங்கியிருந்த இலக்குகளை ராணுவம் முற்றிலுமாக அழித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

“பாரத் மாதாகி ஜே” என்ற முழக்கம் ஒவ்வொரு ராணுவ வீரரையும் நாட்டுக்காக தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துவதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

ஒவ்வொரு ஆண்டும் பாதுகாப்பு துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டை மத்திய அரசு அதிகரித்து வருவதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2013-14-ஆம் ஆண்டில் 2 லட்சத்து 53 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த பாதுகாப்புத்துறை பட்ஜெட் ஒதுக்கீடு, நடப்பாண்டில் ஆறு லட்சத்து 81 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பாதுகாப்பு உற்பத்தியில் தனியார் துறையின் பங்களிப்பு, புதிய கண்டுபிடிப்புகள், உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில் தன்னிறைவை எட்டுவது, பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி, நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருளாதா வளர்ச்சி ஆகியவற்றில் பாதுகாப்பு அமைச்சகம் முனைப்போடு செயலாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒன்பது பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி நந்தினி தேவி, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தலா 10 லட்சம் ரூபாய் முதல் 15 லட்சம் ரூபாய் வரை இழப்பீடு வழங்கவும் உத்தரவிட்டார்.

இந்த தீர்ப்பு குறித்து கருத்து தெரிவித்த மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், சட்டம் தன் கடமையை செய்துள்ளதாக கூறினார்.

*(வாய்ஸ் பைட் - எல். முருகன் - 20 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

வடசென்னையில் 14 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவொற்றியூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இதுவரை ஒரு லட்சத்து 38 ஆயிரம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

<<<<<<<>>>>>

சேலம் ஏற்காடு கோடை விழா இம்மாதம் 23-ஆம் தேதி தொடங்கி, ஏழு நாட்கள் நடைபெறும் என்று மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோடை விழாவையொட்டி நடைபெறும் மலர் கண்காட்சியில் வன விலங்குகள், பறவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், காட்சி வடிவமைப்புகள் உருவாக்கப்பட உள்ளதாக தெரிவித்தார்.

கோடை விழா சீசனையொட்டி, தங்கும் விடுதிகளில் அதிக கட்டணம் வசூலிக்கக்கூடாது என்று தெரிவித்த அவர், இதுகுறித்து சுற்றுலாப் பயணிகளிடமிருந்து புகார் வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

சுற்றுலாப் பயணிகள் பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்களை எடுத்துச்செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால், அனைத்துப்பகுதிகளிலும் குடிநீர் வழங்க மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளதாகவும் திரு ராஜேந்திரன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

கோடை சீசனையொட்டி உதகைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கோடை விழாவின் ஒருபகுதியாக படகு போட்டி இன்று தொடங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 46 செகண்ட்ஸ்*

<<<<<<<>>>>>

தெற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் நாளை முதல் நான்கு நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

*(வாய்ஸ் பைட் - செந்தாமரை கண்ணன் - 47 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை அயனாவரம் இ எஸ் ஐ மருத்துவமனையில் மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு சி வி கணேசன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

--------------

சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் மாத்திரைகள் வழங்குவதற்காக நாளை முதல் கூடுதலாக இரண்டு கவுண்டர்கள் தொடங்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

-------------

ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி ஒன்றியத்தில் 21 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுவரும் இரண்டு தடுப்பணைகளை மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

-----------------

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த தகுதியுள்ள மாணவர்களுக்கு தமிழக அரசின் தமிழ் புதல்வன் மற்றும் புதுமைப்பெண் திட்ட ஊக்கத்தொகை கிடைப்பதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆட்சியர் திருமதி அருணா அறிவுறுத்தியுள்ளார்.

--------------------

இந்திய தர நிர்ணய அமைவனத்தின் மேம்பட்ட வளப்பணியாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் சென்னை பெருங்குடியில் நடைபெற்றது.

---------------

தமிழகத்தில் முதல் முறையாக நெல்லை மாவட்ட பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கான இலவச ட்ரோன் பயிற்சி முகாம் இன்று நடைபெற்றது.

------------------

டிஎன்பிஎஸ்சி குருப்-4 தேர்வு எழுத விரும்பும் சென்னை மாவட்டத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் இலவச பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து பயனடையுமாறு ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே கேட்டுக்கொண்டுள்ளார்.

----------

உதகை மலர் கண்காட்சியை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்திற்கு நாளை மறுநாள் உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுவதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

**<<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப்போட்டியின் மகளிர் பேட்மிண்டன் பிரிவில் தமிழகத்தின் ஆதிரா ராஜ்குமார் வெண்கலப்பதக்கம் வென்றார்.

பீகாரின் Bhagalpur-ல் இன்று நடைபெற்ற இப்போட்டியில் சட்டீஸ்கரை சேர்ந்த தானு சந்திரா தங்கப்பதக்கத்தையும், தில்லியை சேர்ந்த ரிஷிகா வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

இதுவரை, மகாராஷ்ட்ரா 36 தங்கம் உட்பட 89 பதக்கங்களுடன் முதலிடத்தையும், ராஜஸ்தான் இரண்டாம் இடத்தையும், கர்நாடகா மூன்றாவது இடத்தையும், 43 பதக்கங்களுடன் தமிழகம் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளது

----------------

19 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இட்டா நகரில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<<END>>>>>